வேலூர் மண்டல, கண்காணிப்புப் பொறியாளர்(வே.பொ)(பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திரு வி.மாணிக்கவேலு, பி,இ., (விவ).,

செ.மு.ஆணை எண்.ஆ/ 816/2019

நாள்: 05.12.2019

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4 அடங்கிய பணிகள் நேரடி தேர்வு - 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ஆம் ஆண்டு இளநிலை உதவியாளர் (பி.அ) தெரிவு செய்யப்பட்டு பணியில் சேர்ந்தது - திரு எம்.வேலாயுதம், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியினை வரன்முறை செய்து உத்தரவிடுதல்.

பார்வை :
1. செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.1012/PSD-G2/2019, நாள்.27.02.2019
2. வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணிமேலாண்மை) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி5/139388/2018, நாள்.05.03.2019
3. தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அப2/8448/2019, நாள்.08.03.2019
4. செயற் பொறியாளர் (வே.பொ), வேலூர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/916/2019-(3), நாள்.15.03.2019
5. திரு எம்.வேலாயுதம், இளநிலை உதவியாளர் அவர்களின் பணி சேர் அறிக்கை நாள்.18.03.2019
6. தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அப2/8448/2019, நாள்.14.08.2019

************

ஆணை:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ஆம் ஆண்டு நேரடி போட்டி தேர்வின் மூலம் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டு (Selected provisionally) பார்வை 3-ல் காணும் தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, செயற் பொறியாளர் (வே.பொ), வேலூர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 4-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக இவ்வலுவலகத்திற்கு தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்ட திரு எம்.வேலாயுதம் அவர்கள் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 18.03.2019 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார். பார்வை 6-ல் காணும் கடிதத்தின்படி, 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ஆம் ஆண்டு நேரடி போட்டி தேர்வின் மூலம் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டு (Selected provisionally) பணியில் சேர்ந்தவர்களின் பணிவரன்முறை செய்ய கோரியதை தொடர்ந்து அன்னார் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 18.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இப்பணிவரன்முறை சென்னை / மதுரை உயர்நீதி மன்றத்தில் தொகுதி-4, 2015-16, 2016-17 மற்றும் 2017-18 -ஆம் ஆண்டில் நியமனங்கள் குறித்தான நிலுவையிலுள்ள வழக்கின் தீர்ப்புக்குட்பட்டதாகும்.

திரு எம்.வேலாயுதம், இளநிலை உதவியாளர் அவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்யப்பட்ட நாளான 18.03.2019 முற்பகல் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்திற்கு அன்னாரை "தகுதிகாண் பருவத்தில்" அமர்த்தி உத்தரவிடப்படுகிறது. இவர் பவானிசாகர் அரசு அலுவலகர்களுக்கான அடிப்படை பயிற்சி நிறைவு செய்த பின்னரே இவருக்கு இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

5/12/2019

கண்காணிப்பு பொறியாளர் (வே.பொ) (பொ),
வேலூர் மண்டலம், வேலூர்-2

பெறுநர்:
திரு எம்.வேலாயுதம், இளநிலை உதவியாளர் இவ்வலுவலகம்
நகல்: வேளாண்மை ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்: தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்: வேளாண்மை இணை இயக்குநர், வேலூர்
நகல்: செயற் பொறியாளர் (வே.பொ), வேலூர்
நகல்: பணிப்பதிவேடு / இருப்புக் கோப்பு